# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 25
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஜனவரி JANUARY
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**


**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...




நமது **'கிருபையின் கீதங்கள்'** பாடல் புத்தகம் புதிய பதிப்பு ஆயத்தமாக உள்ளது.

- 554 தமிழ் பாடல்கள்
- 40 ஆங்கில பாடல்கள்
- 112 சேர்ந்திசை பாடல்கள்
- 464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : **92443 14431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
கர்த்தர் கற்பிக்கும் வழியில் நாம் நடக்க உதவும் வார்த்தை

YouTube **@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா



# உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு...
## That it may be well with you...

பிரியமான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், எல்லாவற்றையும் புதிதாக்குகின்ற வல்லமையுள்ள ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில், எனது 'புத்தாண்டு வாழ்த்துக்கள்' மற்றும் ஜெபங்கள்!

வருடந்தோறும் ஏதோ ஒரு வசனத்தினை எடுத்துக்கொண்டு, அதனை வாக்குறுதியாக (வாக்குத்தத்தமாக) படிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆயினும் கர்த்தர் நேரடியாக சொன்ன வார்த்தைகளை படிக்கும்போது, நமக்கு நம்பிக்கையும், நன்மையும் மற்றும் அவரை அறிகின்ற அறிவும் உண்டாகும் என்பதினால், இந்த முறை **எரேமியா 7:23**ம் வசனத்தினை மையமாக கொண்டு தியானம் செய்வோம்!

**எரேமியா 7:23 "என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்."**

இந்த வசனம், பிளவுபட்ட தெற்கு ராஜ்ஜியமாகிய யூதேயாவில் இருந்த இஸ்ரயேல் மக்களுக்கு தீர்க்கத்தரிசியாகிய எரேமியாவின் மூலம் கர்த்தர் கொடுத்த கட்டளையை பற்றி சொல்லுகின்றது.

மேலும், யூதேயாவில் இருந்த மக்கள், பாபிலோனிற்கு அடிமையாக போக போகின்றதையும், அடிமையாக போனபின்பு என்னவாகும் என்பதையும் பற்றி எடுத்துரைக்கின்றது. அப்பொழுது அவர்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதனையும், அதனை ஏன் செய்ய வேண்டும்? என்பதனையும், மற்றும் அவ்வாறு செய்தால் (கீழ்படிந்தால்) அடையபோகும் பலன்களை பற்றியும் தெளிவாக பேசுகின்றது. பழைய பிரமாணம் இப்பொழுது அமலில் இல்லை என்றாலும், அவைகள் நமக்கு ஆறுதலையும், நம்பிக்கையும், எச்சரிக்கைகளையும் கொடுக்கின்றதாக இருக்கின்றபடியால் **(ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11)** அவைகளிலிருந்து நமக்கான பாடங்களை தெரிந்துக்கொள்வோம்.

### 1. என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக, அந்த வசனத்தில் **(எரேமியா 7:23ல்)** நாம் என்ன செய்ய வேண்டும்? அதாவது, கர்த்தர் நம்மிடம் சொல்வது என்ன என்பவைகளை கற்றுக்கொள்ள முடியும்.

#### அ) செவிகொடுங்கள்:

**எரேமியா 7:23 "என் வாக்குக்குச் செவி கொடுங்கள்"** இஸ்ரவேல் ஜனங்களுக்கு கடவுள் கொடுத்த கட்டளையுடன் வசனம் தொடங்குகிறது. என் குரலைக் கேளுங்கள், இந்தக் கட்டளை கடவுளின் வார்த்தைகளைக் கேட்பது மட்டுமல்ல, அதற்குக் கீழ்ப்படிவதையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இது கடவுளின் அறிவுரைகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் செவிசாய்ப்பதற்கான அழைப்பாக இருக்கின்றது. என்ன கேட்க வேண்டும்? எப்படி கேட்க வேண்டும்? யார் கேட்க வேண்டும்? கேட்பதினால் என்ன பலன்? என அனைத்து கேள்விகளுக்கும், பைபிள் பதிலளிக்கின்றது.

ஆண்டவர் இயேசு, கேட்கிறதற்கு காதுள்ள அனைவரும் கட்டாயம் கேட்க வேண்டும் என்று சொன்னார். **மாற்கு 4:23** **"கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்"** என்றார். **"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது."** என்று எழுதும்படியாக யோவானுக்கு கட்டளை கொடுக்கப்பட்டது. **வெளி 2:29.**

வசனத்தினை கேட்க வேண்டும், அவர் கட்டளையை கேட்க வேண்டும், அதனை கவனமாய் கேட்க வேண்டும். **யாத்திராகமம் 15:26** **"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."**

அதில் உள்ளபடியே கேட்க வேண்டும் **(யாத்திராகமம் 19:5)**, நம் விருப்பத்திற்கு ஏற்ப அவைகளோடு கூட்டவும், குறைக்கவும் கூடாது; அப்படி போதிக்கின்ற உபதேசங்களை கேட்கவும் கூடாது **(2 யோவான் 7-9)**. சாபத்திலிருந்து தப்பும்படியாக வசனத்தினை கேட்கும்படியாக இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது **(எரேமியா 11:4)**. தேவ எச்சரிப்புகளை அறிந்துக்கொள்ளும்படி கேட்க வேண்டும் **(எரேமியா 11:7)**. மேலும், அவைகளை முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் கேட்க வேண்டும் **(உபாகமம் 30:2)**. அன்புடன் கேட்க வேண்டும் **(உபாகமம் 30:20)**, மற்றும் மனந்திரும்பும்படியாக கேட்க வேண்டும். **உபாகமம் 30:8** **"நீயோ மனந்திரும்பி, கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய்"** மற்றும் ஆசையாய் ஏங்கி கேட்க வேண்டும், **சங்கீதம் 119:131** **"உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்."**

### ஆ) கீழ்படிந்து நடவுங்கள்:

**எரேமியா 7:23** **"...நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள்.."**

இந்த வசனம், அடுத்ததாக, கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, அதன் சத்தியத்தினை கற்றுக்கொண்ட நாம், அதற்கு ஒப்புக்கொடுத்து கீழ்படிந்து நடக்கும்படியான கர்த்தருடைய கட்டளையை வெளிப்படுத்துகின்றது. சத்தியத்தினை கேட்பது எவ்வளவு முக்கியமோ, அதற்கு கீழ்படிவதும் அவ்வளவு முக்கியமானதாகும். நாம் சத்தியத்தினை கேட்பதின்

**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

நோக்கம், அதற்கு கீழ்படிவதாக நம்மை நாமே அர்ப்பணிப்பதாக இருக்க வேண்டும். நாம் எவ்வாறு. எவைகளில் நடக்க வேண்டும் என்பதனை பைபிள் தெளிவாக காண்பிக்கின்றது.

நாம் ஆபிரகாமைப் போல, கர்த்தர் காண்பிக்கும் வழிகளில் நடக்க வேண்டும் **(ஆதியாகமம் 12:1)**, கர்த்தர் நமக்கு கற்பிக்கும் வழிகளில் நடக்க வேண்டும் **(எரேமியா 7:23;, 11:3)**, கர்த்தருடைய விதித்த கட்டளைகளின்படியே (விதிகளின்படியே) நடக்க வேண்டும் **(உபாகமம் 5:33)**. கானா ஊரின் கல்யாண வீட்டில், ஆண்டவர் இயேசு தண்ணீரை மோந்து, பந்தியில் பரிமாற சொன்னபோது, வேலைக்காரர்கள் எப்படி கீழ்பந்தார்களோ, அப்படியே கீழ்படிய வேண்டும் **(யோவான் 2:1–11)**. இரவு முழுவதும் முயற்சி செய்துவிட்டேன், ஒரு மீன்கூட கிடைக்கவில்லை, ஆயினும் ஆண்டவரே உம் வார்த்தையின்படியே வலையை வீசுகின்றேன் என பேதுரு கீழ்படிந்தார் அல்லவா? **(லூக்கா 5:1–10)**. அதுபோல, கர்த்தர் சொல்வது நமக்கு புரியுதோ, புரியவில்லையோ, சொன்னவர் கர்த்தர் என்பதினாலேயே நாம் அதற்கு அப்படியே கீழ்படிய வேண்டும் **(எரேமியா 42:6)**. தாழ்மை யுள்ளவர்களாய், கீழ்படிந்து நடக்க வேண்டும். **2 கொரிந்தியர் 10:5** **"அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம்."**

கர்த்தரை பற்றிக்கொண்டு, அவருக்கு பயந்து, அவரையே சேவித்து, அவரை மாத்திரம் பின்பற்றும்படியாக நடக்க வேண்டும் **(உபாகமம் 13:4; எபிரெயர் 12:9)**, சத்தியத்திலே (உபதேசத்திலே) நடக்க வேண்டும் **(3 யோவான் 1:4; 2யோவான் 1:9)**. மிகவும் கவனமாக (ஜாக்கிரதையாக) நடக்க வேண்டும் **(உபாகமம் 6:3)**. ஒரே வரியில் சொல்வதென்றால், 'ஆண்டவர் இயேசு கிறிஸ்து நடந்த மாதிரியே நடக்க வேண்டும்' **1 யோவான் 2:6** **"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்."**

## 2. ஏன் செய்ய வேண்டும்?

இரண்டாவதாக, அந்த வசனத்தில் **(எரேமியா 7:23ல்)** நாம் ஏன் செவிக்கொடுத்து கீழ்படிய வேண்டும்? என்பதற்கான காரணங்களை கற்றுக்கொள்ள முடியும்.

### அ) நான் உங்கள் கடவுள்(தந்தை, படைப்பாளர்):

**எரேமியா 7:23** **"..அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்"**

நாம் ஏன் கர்த்தருக்கு செவிகொடுத்து, அவர் வழிகளில் நடக்க வேண்டும்? ஏனெனில் அவர் நமது கடவுள், அதாவது நம்மை படைத்தவர் மற்றும் அவர் நமது தந்தை ஆவார். அவர் தமது கட்டளைகளை நம் உள்ளத்திலே வைத்து, அதை நம் இருதயத்திலே எழுதியுள்ளார் **(எரேமியா 31:33)**. நம்மை புறக்கணிக்காமல் சேர்த்துக்கொண்டார் **(யாத்திராகமம் 6:7; யோவான் 6:37)**. நம்மை இரட்சித்து, சுத்தமாக்கியுள்ளார். **எசேக்கியேல் 37:23** **"அவர்கள் இனித் தங்கள் நரகலான விக்கிரகங்களினாலும், தங்கள் அருவருப்புகளினாலும், தங்களுடைய சகல மீறுதல்களினாலும் தங்களைத் தீட்டுப்படுத்துவது மில்லை. அவர்கள் குடியிருந்து பாவஞ்செய்த எல்லா இடங்களிலிருந்தும் நான் அவர்களை நீங்கலாக்கி இரட்சித்து, அவர்களைச் சுத்தம் பண்ணுவேன். அப்பொழுது அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்."**

ஆ) நாம் அவர் மக்கள் (சொந்தம், பிள்ளைகள்)

எரேமியா 7:23 "..அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்"

அடுத்ததாக, நாம் ஏன், கர்த்தருக்கு செவிகொடுத்து, அவர் வழிகளில் நடக்க வேண்டும்? ஏனெனில் நாம் அவருடைய மக்கள். நாம் அவருக்கு சொந்தமானவர்கள் (சகரியா 8:8). நாம் நித்தியமாக அவருடைய பிள்ளைகளாக அவருடன் வாழும்படி அழைக்கப்பட்ட அவருடையவர்களாக இருக்கின்றோம். நம்மையே அவருக்கு ஆலயமாக, ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளார். 2 கொரிந்தியர் 6:16-18 "தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்."

## பொதுவான செய்திகள்

## வீட்டில் மின் பாதுகாப்பு வழிமுறைகள் பற்றி கொஞ்சம் பார்ப்போம்..

★ எர்த் லீக்கேஜ் சர்க்யூட் பிரேக்கர் ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியம், செலவு பாராமல் வைக்க வேண்டும்.

★ வீட்டிலுள்ள வீணாய் போயுள்ள, பழைய சுவிட்சுகளை அவசியம் மாற்றிவிட வேண்டும். தரமான சுவிட்ச்களை வாங்கிப் பொருத்த வேண்டும்.

★ தண்ணீர் ஏற்ற வைத்துள்ள மோட்டர் சுவிட்ச் போர்டு, வாஷிங் மிஷின், ஃபிரிட்ஜ் ஆகியவற்றின் கீழே ரப்பர் மேட் போட்டுக் கொள்வது பாதுகாப்பானது.

★ எந்த சுவிட்சை இயக்கும் போதும் இடது கையை பின்புறத்தில் கட்டிக் கொண்டு, வலது கை சுட்டு விரலால் மட்டுமே இயக்க வேண்டும். இதயம் இடது புறத்தில் உள்ளதால் இப்படி செய்வோம்.

★ பாத்ரூம் சுவிட்ச் போர்டின்மேல் ஒரு பழைய டூத் பிரஷ் வைத்துக் கொண்டு, அதனால் சுவிட்சைப் போடுவதே பாதுகாப்பானது.

★ மழைக்காலம் வாட்டர் ஹீட்டர் அடிக்கடி பயன்படுத்த வேண்டியிருப்பதால், அதன் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஷ

★ பொதுவாக வாட்டர் ஹீட்டருக்கு சாதாரண சுவிட்ச் தான் வைத்திருப்பார்கள். அதற்குப் பதிலாக எம்சிபி வைத்தால், ஹீட்டரில் ஏதாவது ஷார்ட் சர்க்யூட் ஆகும் போது ட்ரிப் ஆகி நம்மை காக்கும். எப்போதும், சுடுநீர் தயார் பண்ணிவிட்டு, MCB ஐ ட்ரிப் பண்ணிவிட்டு குளிக்கப்போவதே நல்லது. இதே போல, வெட் கிரைண்டருக்கும் எம்சிபி பொருத்திக்கொள்வதே நல்லது.

★ ஈர மின் சாதனங்களான வாஷிங் மெஷின், கிரைண்டர் போன்றவற்றைக் கையாளும் போது, சுவிட்ச்சை ஆஃப் பண்ணாமல் ஈரத் துணிகளை எடுப்பதோ, மாவை அள்ளுவதோ கூடவே கூடாது.

## 3. செய்தால் என்ன பலன்?

இறுதியாக, அந்த வசனத்தில் (எரேமியா 7:23ல்) நாம் ஏன் செவிக்கொடுத்து கீழ்படிந்து வாழ்வதினால் என்ன பலன் கிடைக்கும்? என்பதனை கற்றுக்கொள்ள முடியும்.

**எரேமியா 7:23** "என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்."

நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு என்ற பதம், நாம் செவிக்கொடுத்து கீழ்படிந்து வாழ்வதினால் நமக்கு நன்மை உண்டாகும் என்று சொல்லபட்டுள்ளது. பைபிளில் நிபந்தனையின்றி பலன்கள் (நன்மைகள்) இல்லை, பலன்கள் இன்றி எந்த நிபந்தனையும் (கட்டளையும்) இல்லை. **உபாகமம் 6:3** "இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும், உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவிகொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு."

கர்த்தர் கொடுக்கும் நன்மை என்பது, எனக்கு மாத்திரமல்ல, என் குடும்பத்திற்கும், என் தலைமுறைக்கும் நன்மையாக இருக்கின்றது (யாத்திராகமம் 20:6; 34:7; உபாகமம் 5:29; 7:9) மற்றும் அது எப்பொழுதும் எல்லாருக்கும் எல்லா காலத்திலும் நன்மையாகவே இருக்கும் **யாக்கோபு 1:17,18** "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்."

இறுதியாக, பிரியமானவர்களே கர்த்தர் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். அவர் நம்மை படைத்தவர், நாம் அவரின் படைப்பாக இருக்கின்றோம். நாம் அவருடைய வார்த்தைக்கு செவிக்கொடுத்து, கீழ்படிந்து வாழ்ந்து, அவர் நமக்கு வைத்திருக்கின்ற நன்மைகளை பெற்று, 'தலைமுறை தலைமுறையாக அவருடையவர் களாக வாழ்வோம்!' இந்த தீர்மானத்தோடு, இந்த ஆண்டின் ஒவ்வொரு நாளும் வாழுவோம்!

"கர்த்தர் தாமே அவர் சொன்னபடி நமக்கு நன்மைகளை கட்டளையிடுவராக! ஆமென்."

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 2) | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 3) | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |
| 4) | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 5) | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 6) | A. அரவிந்த் | – | மதுரை |
| 7) | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 8) | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 9) | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 10) | G. ஜெர்லின் | – | ரஸ்தா |
| 11) | M. அபி சூர்யா | – | எழுகம்வலசு |
| 12) | P.M.K. சனா | – | மதுரை |
| 13) | M. சஞ்சய் | – | மதுரை |
| 14) | D. டேஃனி | – | சென்னை |
| 15) | D. ஜீனித்தா | – | சென்னை |

# முன்னோக்கிச் செல்வோம்! Let's move Forward

பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்! மற்றும் ஜெபங்கள்!

சென்ற வருடத்தில் நாம் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் உள்ள அநேக பெண்களைக் குறித்து படித்து தெரிந்துக்கொண்டோம். இப்பகுதி (பெண்கள் பகுதி) உங்களின் விசுவாச வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இந்த வருஷத்தின் முதல் மாதத்திலும்கூட, முன்னோக்கி செல்வதைக் குறித்து சில காரியங்களை வேதத்தின் துணைகொண்டு படித்து தெரிந்துக் கொள்வோம்.

### லோத்தின் மனைவி:

இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து வேதத்தில் நாம் படிக்கும்போது மிகவும் எச்சரிக்கையான காரியம் ஒன்று சொல்லப்படுகின்றது. **"லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்"** (லூக்கா 17:32; ஆதி. 19:17) என்று வாசிக்கின்றோம். அப்படியென்றால் அது என்னவென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா?

ஆம் பிரியமானவர்களே! வேதத்தில் அநேக பெண்கள், பெயருடன் குறிப்பிட்டுள்ள போதும்கூட, இவளுடைய பெயர் சொல்லப்படவில்லை. 'பின்னிட்டு பாராதே' என்று கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு அவள் கீழ்ப்படியவில்லை. அதனால் அவளுக்கு அங்கேயே தண்டனை கிடைத்தது.

கிறிஸ்தவ வாழ்வில் நாம் முன்னோக்கி செல்ல நமக்கு தடையாக இருப்பது,

- ★ எச்சரிப்பை மறந்துவிடுதல்
- ★ தீமை மீது பற்று
- ★ மாம்சத்தின் மீது ஆசை
- ★ பாவத்தின் வஞ்சனை

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" பூவரசம் பூ



பூவரசு (Thespesia populnea) சிறிய மரவகையைச் சார்ந்தது. வெப்பவலயப் பகுதிகளில் பரவலாகக் காணப்படும் இம்மரம், 5-10 மீட்டர் உயரம் வரை வளர்கிறது.

குடசம் என்னும் மலரை குறிஞ்சிப்பாட்டு வான்பூங் குடசம் என விளக்கிக் காட்டுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களும் இதனைக் குறிப்பிடுகின்றன. இதனை இக்காலத்தில் பூவரசம் பூ என்கின்றனர். பூவரச மரம் ஆற்றோரங்களில் மிகுதியாகக் காணப்படுவதால், இதனை ஆற்றுப்பூவரசு என்றும் வழங்குகின்றனர்.

லோத்தையும், அவருடைய மனைவி, பிள்ளைகளையும் கர்த்தர் காப்பாற்றி புதிய வாழ்வு, புதிய இடத்திற்கு அழைத்து செல்ல விரும்பினபோதும்கூட லோத்தின் மனைவி பின்னிட்டு பார்த்து உப்புத்தூண் ஆனாள். (ஆதி. 19:15-19). அவளுக்கு தான் விட்டு வந்த காரியத்தின் மீது ஆசை, ஆர்வம், ஏக்கம், பற்று, சிந்தனை. அதினால் தேவ தண்டனைக்கு உள்ளானாள்.

வேதம் நம்மை பழையவைகளை மறக்க சொல்கிறது. பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நோக்கி ஓட சொல்கிறது. (பிலி. 3:13,14).

ஆம் பிரியமானவர்களே! கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நாம், ஒருபோதும் மீண்டும் பாவ வாழ்க்கைக்கு திரும்பக்கூடாது (மத். 4:17; எசே. 18:32; 14:6). மனந்திரும்புங்கள், தீமையை விட்டுவிடுங்கள் என்று வசனம் சொல்கிறது. அநேக வேளைகளில் நம் பார்வைக்கு நலமானதை நாம் கிறிஸ்துவுக்காக விட்டுவிட வேண்டியது வரும்.

தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் நடக்கும் அனைத்துமே நன்மைக்கு என்று விசுவாசிக்கின்றோம். நாம் அதற்கேற்றபடி வாழ வேண்டும். அனைத்தையும் அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டு முன்னேறி / முன்னோக்கி செல்ல வேண்டும். அப்படியே செல்ல, தேவன் நமக்கு கிருபையும், தயவும் பாராட்டுவாராக! ஆமென்.

– சகோதரி. **பெவர்லி விடியா**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil: Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam in Tamil: Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am

**Heaven TV:** Thursday, Friday, Saturday, 6:30-7:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**

Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**

Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# திரளான மீன்களை பிடித்தல்

அன்பிற்குரிய வாலிபர்களே! உங்கள் அனைவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். கர்த்தர் கொடுத்த இன்னுமொரு ஆசீர்வாதமான ஆண்டிற்காக நன்றி சொல்லுவோம்!


புதிய ஆண்டிலே உலக வாழ்க்கைக்காக அநேக தீர்மானங்களை எடுத்திருக்கலாம். அதேபோல ஆவிக்குரிய வாழ்விலே ஏதாவது தீர்மானங்களை கிறிஸ்துவுக்காக எடுக்கும்படியாகவும், உங்களை நான் உற்சாகப்படுத்துகின்றேன்.

நாம் தொடர்ச்சியாக ஓர் ஆண்டு முழுவதும் இயேசு ஆண்டவரின் அற்புதங்களையும் அதற்கான ஆவிக்குரிய அர்த்தங்களையும், நோக்கங்களையும் தியானித்து வருகின்றோம். அந்த வரிசையிலே இந்த மாதமும் ஒரு அற்புதத்தையும், அதன் ஆவிக்குரிய நோக்கத்தையும் தியானிப்போம்.

**(லூக்கா 5:1-6)** ஆண்டவராகிய இயேசு கெனேசரேத் கடலோரத்தில் நின்றபோது, திரளான ஜனங்கள் தேவ வசனத்தை கேட்கும்படி அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது 2 படவுகள் கடற்கரையில் நிற்பதைக் கண்டு, அதில் ஒரு படவில் ஏறினார். அந்த படவு சீமோன் பேதுருவினுடையதாயிருந்தது. அதில் ஏறி ஆண்டவர் இயேசு போதகம் பண்ணினார்.

போதகத்தை முடித்து, சீமோனை அழைத்து, படவை ஆழமாய் கொண்டு சென்று வலையை போடும்படி சொன்னார். **அதற்கு பேதுரு இரவு முழுவதும் முயற்சி செய்தோம், ஒன்றும் அகப்படவில்லை என்றான்.**

பொதுவாக மீனவர்களுக்குத் தெரியும், இரவில் மட்டுமே மீன்களைப் பிடிக்க முடியும். வெளிச்சம் இருக்கும் நேரங்களில், அதாவது பகலில் மீன்கள் மேலே வருவது அரிது. இயேசு சீமோன் பேதுருவிடம் சொன்ன வேளையும், இப்படிப்பட்ட ஒரு வெளிச்சம் நிறைந்த இருளை காணமுடியாத நேரமாக தான் இருந்தது. ஆனால், **சீமோன் பேதுருவோ,**



**உம்முடைய வார்த்தையின்படி வலையை போடுகிறேன் என்றான்.** அப்பொழுது, வலை கிழியத்தக்கதாக ஆயிரக்கணக்கில் மீன்களைப் பிடித்தனர்.

பேதுருவின் படவில் மீன்களை வைக்க முடியாமல் அருகில் இருந்த படவுகளும் நிரம்பத்தக்க திரளான மீன்களைப் பிடித்தனர். பேதுருவின் வாழ்க்கையை மாற்றி, அவனை ஒரு மீன்பிடிப்பவனாக மட்டுமல்லாது, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கு மனுஷர்களைப் பிடிக்கிறவனாக உயர்த்திய தருணம் அது.

இயேசு இந்த அற்புதம் செய்ததின் ஆவிக்குரிய நோக்கம் என்னவென்றால், தேவ வார்த்தைக்கு முதலிடம் கொடுக்கும்போது, மற்ற நன்மைகள் தானாக வந்துசேரும். ஆச்சரியப்படும் விதமாகவும் இருக்கும். நமக்கு மாத்திரமல்ல நம்மைச் சார்ந்தவர்களுக்கும் அது நன்மையாக மாறும் என்பதே ஆகும். அப்படியென்றால், நாமும் ஒரு காரியத்தைச் செய்யும் முன்பு வேதவசனம் என்ன சொல்லுகிறது என்று கவனிக்க, கேட்க வேண்டும். ஆகவே, தேவ வார்த்தை கேட்கின்ற தருணத்தை, சமயத்தை அதிகமாக வாஞ்சிப்போம்! மிகவும் ஆசையாக விருப்பமாக வசனத்தைப் படிப்போம், கேட்போம்! தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

– உங்கள் அண்ணன்

**JP**

சிறுவர் பகுதி

# சிம்சோனின் பலம் பலவீனமானது

சிறுவர்களே, யாவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த மாதம் சிம்சோனின் பலம், பலவீனமானதைப் பற்றி பார்க்கலா? (நியா. 13:1-5).

சிம்சோன் தாண் கோத்திரத்தைச் சேர்ந்த மனோவின் மகன். இவனுடைய அதிசயமான பிறப்பைப் பற்றி (நியாயா. 13ம் அதிகாரம்) சொல்லப்பட்டிருக்கிறது. சிம்சோனைப் பற்றி சிறப்பாக சொல்லக்கூடிய காரியங்கள்.

1) நசரேய பொருத்தனைக்குட்பட்டவன்.
2) கர்த்தருடைய ஆவியினால் அதிசயமான பெலன் பெற்றவன்.
3) இஸ்ரயேலின் ஒரு நியாயாதிபதி.

சிம்சோன் முழு தேசத்துக்கும் நியாயாதிபதி அல்ல. பெலிஸ்தியரின் நாட்டுக்கு அருகான பகுதிக்கு மாத்திரம் இருபது வருடங்களாய் நியாயாதிபதியாக இருந்தான். இவனுடைய பராக்கிரமம் நசரேய பொருத்தனைக்கு சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, இவனுடைய பெலன் இவன் தலைமுடியில் இருந்தது. சரியோ, தவறோ இவன் செய்த எல்லாவற்றிலும், தன் பொருத்தனையைக் காத்துக் கொண்டிருந்த மட்டும் ஜெயம் பெற்றான்.

சிம்சோன் மிகவும் பராக்கிரமசாலி, கர்த்தர் அவனோடு இருக்குமட்டும், ஒரு பால சிங்கத்தை ஒரு ஆட்டுக்குட்டியை கிழித்து போடுவதுபோல் சிங்கத்தைக் கொன்று போட்டான். அதேபோல ஒரு கழுதையின் தாடை எழும்பைக் கொண்டு, ஆயிரம் பேரை கொன்றுபோட்டான். சிம்சோன் கர்த்தர் சொன்ன நியமங்களின்படி இருக்கும்வரை கர்த்தருடைய ஆவியானவர் அவனோடுகூட இருந்தான்.

ஒருநாள், ஒரு பெண்ணினாலே தன் இருதயத்திலிருந்ததை வெளியிட்டு, தன் பொருத்தனையை மீறினபோது தேவன் அவனைக் கைவிட்டார்.

பிள்ளைகளே! உங்களையும் கர்த்தர் ஏதோ ஒரு நோக்கத்திற்காக சிம்சோனைப்போல தெரிந்து கொண்டுள்ளார். அதை உங்கள் மனதிலே எண்ணிக்கொண்டு, கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்ற முன் வாருங்கள். கர்த்தருடைய இந்த சிறப்பான நோக்கத்தை சிம்சோனைப்போல உலக



காரியங்களுக்காக, உலக ஆசைகளுக்காக விட்டுவிடாதீர்கள். கர்த்தர் உங்களோடுகூட இருந்தால், நீங்கள் எல்லாவற்றிலேயும் வெற்றி பெறலாம். கர்த்தர் வேண்டாம் என்று மனதில் எண்ணி, கர்த்தரை விட்டு பின்வாங்கினால் அல்லது உலக ஆசைக்கு இடங்கொடுத்தால் தோல்விகளே சாத்தியமாகும். மாறாக, கர்த்தரோடு கை கோர்த்து நடவுங்கள். கர்த்தர் உங்களோடுகூட இருப்பார். ஆமென்.

**மனப்பாட வசனம் : 2 நாளாகமம் 15:2** "....நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார், நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார்...".

— சகோ. பீட்டர்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. சிம்சோன் எதனைக் கொண்டு ஆயிரம் பேரை கொன்று போட்டான்?
2. கர்த்தர் எசேக்கியாவிற்கு எத்தனை ஆண்டுகள் ஆயுசு நாட்களை அதிகமாக கொடுத்தார்?
3. கர்த்தர் எதற்காக சர்ப்பத்தை இஸ்ரவேலருக்குள்ளே அனுப்பினார்?
4. சர்ப்பத்தினால் கடிபட்டவர்கள் என்ன செய்தால் பிழைப்பார்கள் என்று கர்த்தர் சொன்னார்?
5. செங்கடல் எதினால் இரண்டாக பிளந்தது?

# கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்ற எசேக்கியா ராஜா



கிறிஸ்துவுக்குள் அன்பான குழந்தைங்களா!! எல்லாரும் எப்படி இருக்கீங்க?. யாவருக்கும் அன்பின் புதிய வருட வாழ்த்துக்கள். கர்த்தருடைய வார்த்தையை வாசிப்பதற்காக வந்த அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள்!!

கர்த்தருக்கு பிரியமான செல்லப்பிள்ளைகளா! இந்த மாதம் நாம் கர்த்தருக்குப் பிரியமாக நடந்துகொண்ட ராஜாவைக்குறித்து படிக்க இருக்கிறோம். அந்த ராஜாவின் பெயர்தான் எசேக்கியா. எசேக்கியா இருபத்தைந்து வயதில் யூதா என்னும் நாட்டின் ராஜாவாக முடிசூட்டப்பட்டார். இவரது தந்தையின் பெயர் ஆகாஸ். இவரது தாயின் பெயர் ஆபி. எசேக்கியா இளம் வயதிலேயே ராஜாவாக முடிசூட்டப்பட்டாலும் கர்த்தருக்கு மிகவும் பயந்தவராகவும், கர்த்தருக்கு பிரியமானவராகவும் இருந்தார். இவரும் தாவீதைப் போலவே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதை செய்தான் என்று நம்முடைய பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. ஒரு நாட்டினுடைய அரசன் (ராஜா) கர்த்தருக்கு பிரியமாக நடந்துகொள்வது மிகவும் அரிதான காரியம் அல்லவா? ஆம், எசேக்கியா அப்படிப்பட்டதான ஒரு அரிதான அரசன்.

மேலும், எசேக்கியா ராஜா சிலை வழிபாடுகளின் மேலே கொஞ்சமும் விருப்பமில்லாதவனும், கர்த்தரை மாத்திரம் முழுவதும் நம்பியிருந்தான் என்றும், அவனுடைய ஆட்சிக் காலத்தின் அந்த நாட்டில் இருந்த அனைத்து சிலைகளையும் உடைத்துப் போட்டான் என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தர் மோசேயிடம் சொன்ன பத்து கட்டளையையும் முழுவதுமாக பின்பற்றினான் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. அதனாலேயே கர்த்தர் அவனோடு இருந்தார்.

எசேக்கியா ஒரு நல்ல அரசன், ஏனென்றால் எசேக்கியா தன்னையும் தன்னுடைய செல்வத்தையும், அல்லது அதிகாரத்தையும் நம்பாமல் அந்த அதிகாரத்தை ஏற்படுத்துகின்ற கர்த்தரை நம்பினான். அதினால் கர்த்தர் அவனோடு இருந்தார். மேலும் பெலிஸ்தர் என்று சொல்லப்படும் ஆட்சிக் காலத்தில் அந்நாட்டு மக்கள் அனைவரும் உண்மையுள்ள கர்த்தரை தொழுதுகொண்டார்.

இப்படியாக எசேக்கியா வாழ்ந்துகொண்டிருக்கும் போது ஒருநாள் எசேக்கியா ராஜா நோய்வாய்ப்பட்டு, மரண படுக்கையில் இருந்தார். அப்பொழுது எசேக்கியா மனம் தளராமல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அப்பொழுது கர்த்தர் எசேக்கியாவின் வேண்டுதலுக்கு செவிசாய்த்து அவருடைய ஆயுசு நாட்களில் பதினைந்து வருடங்களை அதிகரித்துக் கொடுத்தார்.

கர்த்தருக்கு பிரியமான செல்லங்களா! நாமும் எசேக்கியா ராஜா போலதான் இருக்கவேண்டும். எசேக்கியா, அரசனாக இருக்கும்போதும் கர்த்தருக்கு பயந்தவனாக இருந்தான். கர்த்தர் சொன்ன அனைத்து கட்டளைகளையும் பின்பற்றினான், அப்படியிருந்தும் அவன் வியாதிப்பட்டான். ஆனாலும், அவன் கர்த்தரை குறை சொல்லவில்லை. கர்த்தரும் அவனுடைய ஆயுசு நாட்களை அதிகரித்துக் கொடுத்தார். என்ன ஒரு ஆச்சரியம்!

இப்பொழுது நம்மைக் குறித்து சிந்திப்போமா? நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமா? நம்முடன் கர்த்தர் இருக்கிறாரா? என்பதை சிந்திப்போம். நாமும் எசேக்கியா ராஜாவைப்போல நடந்துகொண்டால் நம்முடனும் கர்த்தர் இருப்பார். கர்த்தர் எவைகளை வெறுக்கிறாரோ அவைகளை நாமும் வெறுக்க வேண்டும். கர்த்தர் எவைகளை பின்பற்றும்படி நமக்கு அறிவுறுத்துகிறாரோ அவைகளை அப்படியே பின்பற்ற வேண்டும். தினமும் வேதாகமம் (பைபிள்) வாசிக்க வேண்டும். அதில் நம்முடைய கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதை அப்படியே பின்பற்ற வேண்டும். அப்பொழுது நாமும் எசேக்கியா ராஜாவைப்போல ஆசீர்வதிக்கப்படுவோம்

**மனப்பாட வசனம்: சங்கீதம் 37:4** "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# வெண்கலச் சர்ப்பம்

கடவுளின் செல்லப்பிள்ளைகளா! புதுவருடம் எப்படியிருந்தது, கடவுளுக்காக நன்றி சொன்னீர்களா? நல்ல தீர்மானம் எடுத்தீர்களா? போனவருடம் எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றினீர்களா? புது வருடம் சந்தோஷமாக இருந்தீர்களா? இப்பக்கூட இந்த ஜனவரி மாதம் புதிதாக ஒரு பைபிள் சம்பவத்தை கற்றுக் கொள்ளலாமா? என்னோடு சேர்ந்து நீங்களும் கற்றுக்கொள்வீர்களா?

பைபிளில் யாக்கோபு என்ற ஒருவர் இருந்தார். அவரின் பிள்ளைகள் 12பேர். அவர்கள்தான் இஸ்ரவேலர்கள். அவர்கள் எகிப்து என்ற நாட்டிலேபோய் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களை அந்த நாட்டு ராஜா பார்வோன் அடிமையாக நடத்தினான், ரொம்ப கஷ்டபடுத்தினான். செங்கல் அறுப்பது, சுடுவது என்று பல வேலைகளை வாங்கினான். இவர்கள் கடவுளை நோக்கி கெஞ்சி அழுது ஜெபித்தார்கள், அதனால் என்ன நடந்தது என்று தெரியுமா?

மோசே என்னும் ஒருவரை அழைத்து அவர்களை கடவுள் விடுதலையாக்கினார். வனாந்திர வழியாக கானானுக்கு வழிநடத்தினார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள், கடவுளையும், மோசேயையும் குறை சொன்னார்கள்.

என்ன சொன்னார்கள் தெரியுமா? உணவு இல்லை, தண்ணீர் இல்லை என்றார்கள். கடவுள் உணவு கொடுத்தார், அதை அற்பமாக எண்ணினார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய் சர்ப்பத்தை அனுப்பினார். அவை ஜனங்களை கடித்தது. அநேகர் மரித்துப் போனார்கள். ஜனங்கள் பயந்து மோசேயை நோக்கி, நாங்கள் பேசினது தவறு என்று மன்னிப்பு கேட்டு கெஞ்சினார்கள். அப்பொழுது மோசே கடவுளிடம் ஜெபித்தார்.

கடவுள் மோசேயை ஒரு கொள்ளிவாய்



சர்ப்பத்தை வெண்கலத்தில் செய்து, அதை ஒரு கம்பத்தில் தூக்கிக்கட்டு, அதை யாரெல்லாம் நோக்கி பார்க்கிறார்களோ அவர்கள் பிழைப்பார்கள் என்று சொன்னார்.

மோசேயும் அதன்படி செய்தார். யாரெல்லாம் சர்ப்பத்தினால் கடிபட்டார்களோ, அவர்கள் அந்த வெண்கல சர்ப்பத்தை, நோக்கி பார்க்கும்போது பிழைத்துக்கொண்டார்கள். கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்களும் உங்கள் அம்மா, அப்பா உங்களுக்கு கொடுக்கும் உணவு, உடை, படிப்பு, இப்படியிருந்தால் நல்லாயிருக்கும், அப்படியிருந்தால் நல்லாயிருக்கும் என்று குறை சொல்கிறீர்களா? கடவுள் வருத்தப்படுவார்.

சிலுவையில் மரித்த இயேசுவை நோக்கி பார்க்கனும், கடவுளிடம் ஜெபிக்கனும், கடவுள் அம்மா, அப்பா மூலம் கொடுத்த நன்மைகளுக்காக நன்றி சொல்லனும். முதலில் அப்பா அம்மாவுக்காக நன்றி சொல்லனும். கடவுள் செய்த நன்மையை நினைத்து நன்றி சொல்லனும். சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவுக்காக, சபைக்காக நன்றி சொல்லனும். சொல்வீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**மனப்பாட வசனம் : ஆமோஸ் 5:6** "கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்"

– சகோ. அன்பு ஏசுதாஸ்

சிறுவர் பகுதி

# செங்கடல்

செல்ல குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள், இந்த ஆண்டிலே தேவன் உங்களுக்கு படிப்பில் ஞானத்தையும், வாழ்விலே கிருபையையும் அதிகமாய் கொடுப்பாராக.

இந்த புதிய மாதத்திலே நாம் இஸ்ரயேல் (யாக்கோபின் சந்ததி ஜனங்களையும், எகிப்திலிருந்து விடுதலை பெற்று வரும்போது நடுவே இருந்து செங்கடலை எவ்வாறு கடந்து வந்தார்கள் என்பதையும் நாம் பார்க்க இருக்கிறோம்.

எகிப்து தேசத்தில் இஸ்ரயேல் (யாக்கோபின் சந்ததி ஜனங்கள் ஏறக்குறைய 430 வருடங்கள் அடிமையாக வாழ்ந்தனர். அப்போது அவர்கள் தேவனை சுதந்திரமாக தொழுதுகொள்ள விடாதபடிக்கு ரொம்ப கஷ்டபடுத்தினான். செங்கல் அறுப்பது, அதனை சுடுவது என்று பல வேலைகளை வாங்கினான். இஸ்ரயேலரோ தேவனை நோக்கி கெஞ்சி அழுது பார்வோன் கையிலிருந்து எங்களை விடுதலை செய்யும் என்று ஜெபத்தின்மூலம் அனுதினமும் தேவனிடம் முறையிட்டனர்.

தேவன் அவர்களது கூக்குரலையும், விண்ணப்பத்தையும் கேட்டு, அவர்களை விடுவிக்க சித்தமானார். அப்போது தேவன் அவர்களின் நடுவிலே ஒரு தீர்க்கதரிசியாக மோசேயை ஏற்படுத்தி, பார்வோனிடம் சென்று பேசும்படி ஆயத்தம்செய்தார். ஆனால் பார்வோனோ அதை மறுத்து ஜனங்களை அனுப்பவில்லை. அதனால் தேவன் பார்வோனுக்கும், எகிப்தில் வாழும் (இஸ்ரயேலர் அல்லாத) மக்களுக்கும் 10 வாதைகளை அனுப்பினார்.

அதனைக் கண்டு மிரண்டுபோன பார்வோன் இஸ்ரயேல் ஜனங்களை விரைவாக எங்கள் நாட்டை விட்டு கூட்டிப்போ என்று மோசேயிடம் கூறினார். தேவன் இஸ்ரயேலரின் ஜெபத்தை கேட்டு அற்புதவிதமாக பார்வோன் கையிலிருந்து விடுவித்து, மோசேயின் மூலம் அவர்களை கானானை நோக்கி அழைத்துச் சென்றார்.

அப்போது வழியிலே மிகப்பெரிய செங்கடல் அவர்கள் முன்பாக இருந்தது. அந்த சமயத்தில் பார்வோனின் இருதயத்தில் இந்த ஜனங்களை நாம் அனுப்பிவிட்டோமே அவர்கள் செய்த வேலையை இப்பொழுது யார் செய்வார்கள்? ஆகவே, நான்



அவர்களுக்கு முன்பாக சென்று, அவர்களை மீண்டும் சிறைப்பிடித்து வருவேன் என்று தீர்மானித்து, இஸ்ரயேலர்கள் பின்னால் வந்தான். இதைக் கண்ட இஸ்ரயேல் ஜனங்கள் மோசேயை நோக்கி முறையிட்டார்கள். எப்படி நாங்கள் இதிலிருந்து தப்புவோம். பின்பாக பார்வோனின் சேனை, முன்பாக செங்கடல் நாங்கள் என்ன செய்வோம்? என்றார்கள்.

மோசேயோ தேவனை நோக்கி ஜெபித்து, நீங்கள் சும்மாயிருங்க, கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார் என்றுக்கூறி, தேவன் அவனுக்கு சொன்னபடியே அவன் கையிலிருந்து கோலை செங்கடலுக்கு நேராக நீண்டினான். அப்பொழுது அது தேவனுடைய பராக்கிரமத்தினாலும், மிகுந்த வல்லமையினாலும் செங்கடல் இரண்டாக பிளந்து தண்ணீர் எல்லாம் இருபுறமும் சுவர்போல் நின்றது. இஸ்ரயேலர் அதின் வழியாய் சேதமின்றி கடந்தார்கள். ஆனால் பார்வோனின் சேனைகள் செங்கடலுக்குள் நுழைந்தபோது செங்கடல் அவர்களை மூடிப்போட்டது. அவர்களின் ஒருவனும் தப்பவில்லை. இவ்விதமாக தேவன் இஸ்ரயேலரை பார்வோனின் கையிலிருந்து செங்கடல் வாயிலாக பாதுகாத்தார்.

குட்டீஸ்! இந்த சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிற பாடம். தேவன் எவ்விதமான பிரச்சனை, போராட்டங்கள் நம்மை பயமுறுத் தினாலும் தேவனும், அவரது வார்த்தையும் நம்மிடம் இருக்கும்போது நாம் பயப்பட தேவையில்லை. தேவன் நம்மை பாதுகாப்பார். தேவனை மாத்திரம் பற்றிக்கொண்டு வாழ்விலே அவர்மூலம் வருகிற பாதுகாப்பை இந்த ஆண்டு முழுதும் பெற்றுக் கொள்வோம். அடுத்த இதழில் சந்திப்போம் குழந்தைகளே.

**மனப்பாட வசனம் :** **யாத்திராகமம் 14:14** "கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்"

– சகோ. ஜான் செல்லையா

# ஜனவரி மாத கேள்விகள்

(**யோவான்** புத்தகத்தில் இருந்து)

1. பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று இயேசுவிடம் கேட்டவன் யார்?
2. கனி கொடுக்கிற கொடியை பிதா எதற்காக சுத்தம் பண்ணுகிறார்?
3. தேற்றரவாளன் வரும்போது எவைகளைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்?
4. நம்முடன் இருக்கும்படிக்கு பிதா யாரைத் தந்தருளுவார்?
5. இயேசு எதை வைத்துப்போகிறேன் என்று கூறினார்?
6. வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இயேசு கூறியது என்ன?
7. இயேசு ஆவியை ஒப்புக்கொடுத்த நாள் எந்த நாள்?
8. வாரத்தின் முதல்நாள் காலையில் கல்லறையினிடத்திற்கு வந்தவள் யார்?
9. நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று இயேசு எத்தனை தரம் பேதுருவிடம் கேட்டார்?
10. யார் மரிப்பதில்லை என்ற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பினது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-02-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

1. யோவான் 9:31
2. யோவான் 10:41
3. யோவான் 11:18
4. யோவான் 11:26
5. யோவான் 12:31
6. யோவான் 13:2
7. யோவான் 13:8
8. யோவான் 13:21
9. யோவான் 13:27
10. யோவான் 14:2

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


| | | | |
|---|---|---|---|
| 1) | Mrs.P. சமாதானம் பீட்டர் | – | விருதுநகர் |
| 2) | P. ரேச்சல் ஜானிமா | – | நெல்லை |
| 3) | S. அசோக்குமார் பிரின்ஸ் | – | தூத்துக்குடி |
| 4) | S.G. சேகர் | – | ராணிபேட்டை |
| 5) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | – | சேலம் |
| 6) | Mrs. காந்தா மனோகரன் | – | திருச்சி |
| 7) | Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் | – | நெல்லை |
| 8) | Mrs. பட்ரிசியா டேவிட் | – | சேலம் |
| 9) | Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் | – | தூத்துக்குடி |
| 10) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | – | மதுரை |
| 11) | Y. ஜெயசுதா பொன்செல்வி | – | சென்னை |
| 12) | Mrs.A. இமல்டா சுந்தர்சிங் | – | ஈரோடு |
| 13) | Mrs. தேவி ராஜாசிங் | – | தூத்துக்குடி |
| 14) | S.S. ஞானவின்சா ஸ்பர்ஜன் | – | டோனாவூர் |
| 15) | Mrs. ஹெப்ஸி தாமஸ் | – | படப்பை |
| 16) | Mrs. பியூலா ஜேசுராஜன் | – | புதுவை |
| 17) | Mrs. சாந்தி ஜோயல் | – | திருச்சி |
| 18) | P.S. ருக்மணி | – | கோபி |
| 19) | Mrs.C. வள்ளி | – | கரூர் |
| 20) | J.V. சுந்தரபாய் வில்லியம் | – | சேலம் |
| 21) | S. ஷீபா ஞானவின்சா | – | டோனாவூர் |
| 22) | D. சந்திரன் மோசஸ் | – | பெங்களூர் |
| 23) | N. ஜான் செல்லையா | – | மதுரை |
| 24) | J. ஜெயராணி ஜான் | – | மதுரை |
| 25) | S. கார்த்திக் | – | கரூர் |
| 26) | M. ராஜா | – | கரூர் |
| 27) | M. ஈஸ்வரி | – | கரூர் |
| 28) | G. ஏஞ்சலம்மாள் | – | மதுரை |
| 29) | Mrs. இந்திரா பாண்டி | – | மதுரை |
| 30) | Mrs. ரெக்ஸிலின் டெல்பினா | – | தூத்துக்குடி |
| 31) | Mrs. மேரி ராஜ் | – | மதுரை |
| 32) | Mrs. ஹெலன் திலக் | – | தூத்துக்குடி |
| 33) | Mrs. தெல்மா ஸ்டான்லி | – | மதுரை |
| 34) | A. கார்பஸ் பிலேமோன் | – | மதுரை |
| 35) | C. வைலட் கிறிஸ்டோபர் | – | தளவாய்புரம் |
| 36) | J. ஜான்சி | – | ஆனைமலை |
| 37) | A. ரோஸ்மேரி | – | சென்னை |
| 38) | Mrs. பெரில் பாஸ்கர் | – | படப்பை |
| 39) | Mrs. சாந்தி வில்லியம் | – | புதுக்கோட்டை |
| 40) | Mrs.D. குளோரி திலகவதி | – | சென்னை |
| 41) | Mrs. சூரிய பிரியா | – | மதுரை |
| 42) | G. பார்த்திபன் | – | வேலூர் |
| 43) | S. டேவிட் சாந்தகுமார் | – | வல்லம் |
| 44) | J.K. ஜாய்ஸ் ஷகிலா | – | நாகலாபுரம் |
| 45) | M.S. ஜேம்ஸ் | – | திண்டுக்கல் |
| 46) | Mrs.R. சரோஜா | – | தென்கலம் |
| 47) | A. லலிதா | – | புதுக்கோட்டை |
| 48) | A. டேவிட் ஜெயசந்திரன் | – | மதுரை |
| 49) | Mrs. ராணி குமரன் | – | கரூர் |
| 50) | S. பாக்கியராஜம் | – | மதுரை |
| 51) | Mrs.P. உமாராணி | – | சித்தோடு |
| 52) | Mrs. பியூலா ஜேசுராஜன் | – | புதுவை |
| 53) | R. ஞானசிரோன்மணி | – | மதுரை |
| 54) | Mrs. குளோரி பால்ராஜ் | – | தஞ்சாவூர் |
| 55) | D.I.அன்பு சுதந்திரம் | – | நெல்லை |


தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 📖 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th January 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th January 2025

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்









அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers